## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 02, 2017

**1. சர்வதேச அளவில் பாராட்டுகளை பெற்ற ஆசிரியர் நீல் கைமான்(Neil Gaiman) UNHCR-ன் நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எந்த நாட்டை சேர்ந்தவர் ?**

A. இங்கிலாந்து
B. ரஷ்யா
C. பிரான்ஸ்
D. அமெரிக்கா

**விடை: A. இங்கிலாந்து**

வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த மற்றும் தேவையான நிதியை உருவாக்க, சர்வதேச அளவில் பாராட்டுகளை பெற்ற ஆசிரியர் நீல் கைமான்(Neil Gaiman) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையத்தின் (UNHCR) நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது குறிப்பிடத்தக்க பணிகளில் காமிக் புத்தக தொடர்களான The Sandman and novels Stardust, American Gods, Coraline, மற்றும் The Graveyard Book ஆகியவை அடங்கும்.

**2. 2017 சர்வதேச யோகா திருவிழா, எந்த மாநிலத்தில் தொடங்கியது ?**

A. மத்தியப் பிரதேசம்
B. உத்தரகண்ட்
C. ஜார்க்கண்ட்
D. பீகார்

**விடை: B. உத்தரகண்ட்**

சர்வதேச யோகா திருவிழாவின் 29-வது பதிப்பு, உத்தரகண்ட் மாநிலத்தின் ரிஷிகேஷில் உள்ள புனித கங்கை நதி கரையோரம் அமைந்துள்ள பர்மார்த் நிகேதனில் மார்ச் 1, 2017 அன்று தொடங்கியது. இந்த ஒரு வார கால நிகழ்வை ஆயுஷ் அமைச்சகம், உத்தரகண்ட் சுற்றுலா வளர்ச்சி வாரியம், பர்மார்த் நிகேதன் மற்றும் கர்வால் மண்டல் விகாஸ் நிகாம் கூட்டாக

ஏற்பாடு செய்துள்ளது. இதனை உத்தரகண்ட் ஆளுநர் கே கே பால் தொடங்கி வைத்தார். இந்த ஆண்டு விழாவில், உலகம் முழுவதும் 20-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 70 ஞானிகள், யோகசார்யாஸ், வழங்குநர்கள் மற்றும் நிபுணர்கள் பங்கேற்கின்றனர்.

**3. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (SAARC) புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. அகமது சலீம்
B. அபுல் அசன்
C. அம்ஜத் ஹூசைன் பி சியால்
D. அர்ஜுன் பகதூர் தாபா

**விடை: C. அம்ஜத் ஹூசைன் பி சியால்**

மூத்த பாகிஸ்தானிய அரசியல் நிபுணர் அம்ஜத் ஹூசைன் பி சியால், பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (SAARC) புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேபாளின் அர்ஜுன் பகதூர் தாபாவின் இடத்தை நிரப்புகிறார். சியால், பாகிஸ்தானின் வெளியுறவு சேவையில் 33 ஆண்டுகள் அனுபவம் கொண்டவர். மேலும் இவர், காத்மண்ட்டில் சார்க் செயலகத்தில் இயக்குனராக பணியாற்றியிருக்கிறார். பொதுச்செயலாளரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் மற்றும் நேபாளின் காட்மாண்டை தலைமையிடமாகக் கொண்ட சார்க் செயலகத்தின் தலைவரும் இவரே. சார்க் செயலகம் பணிகளை செயல்படுத்துதல், கூட்டங்களை நடத்துதல் ஆகியவற்றை கண்காணித்து ஒருங்கிணைக்கிறது மற்றும் சங்கத்திற்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் அதேபோல் மற்ற பிராந்திய அமைப்புக்களுக்கும் இடையே ஒரு தொடர்பு சேனலாகவும் சார்க் செயலகம் பணியாற்றுகிறது.

**4. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. வி கே ஜெய்ரத் மக்யா
B. அதுலேஷ் ஜிண்டால்
C. குருமூர்த்தி மகாலிங்கம்

D. அஜய் தியாகி

**விடை: D. அஜய் தியாகி**

இமாசலப் பிரதேச பணிப்பிரிவின் 1984 தொகுதி ஐஏஎஸ் அதிகாரி அஜய் தியாகி, சந்தை கட்டுப்பாட்டாளரான இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின்(SEBI) புதிய தலைவராக 3 ஆண்டு காலத்திற்கு 2017 மார்ச் 01 அன்று நியமிக்கப்பட்டார். இவர் U K சின்ஹாவின் இடத்தை நிரப்புகிறார். இந்த பதவிக்கு முன்பு, நிதி அமைச்சகத்தின் மூலதன சந்தைகள் பிரிவை தியாகி கையாண்டு கொண்டிருந்தார். மேலும் தியாகி, மத்தியில் பல்வேறு அனுபவங்களை கொண்டுள்ளார். 2014 நவம்பரில் நிதி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராக சேர்வதற்கு முன்னர், சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தில் இணை செயலாளராக இவர் இருந்தார். மேலும் இவர், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, ஸ்டீல் மற்றும் ஊரக மேம்பாட்டு அமைச்சகங்களிலும் பணிபுரிந்தார். செபியின் தலைவர் மாதத்திற்கு ரூ 4.5 லட்சம் தொகுப்பூதியம் பெறுவார்.

**5. உலக வர்த்தக அமைப்பிற்கு (WTO) இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. ஜே எஸ் தீபக்
B. ஜி லதா கிருஷ்ண ராவ்
C. என் கே சின்ஹா
D. பிரமிளா லாலன்

**விடை: A. ஜே எஸ் தீபக்**

உத்தரப் பிரதேசத்தை சேர்ந்த 1982 ஆம் தொகுதி ஐஏஎஸ் அதிகாரி, டெலிகாம் செயலாளர் ஜே எஸ் தீபக், ஜூன் 1, 2017 முதல் உலக வர்த்தக அமைப்பிற்கு (WTO) இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதிகாரப்பூர்வ ஆணைப்படி, தொலைத் தொடர்பு அமைச்சகத்தில் இருந்து இவர் இடம் மாற்றம் செய்யப்பட்டு வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் வர்த்தகத் துறையில் சிறப்புப் பணி (OSD) அதிகாரியாக மே 31 வரை நியமிக்கபட்டுள்ளார். உலக வணிக அமைப்பானது, நாடுகள்

இடையே வர்த்தக விதிகளை கையாளும் ஒரு உலகளாவிய சர்வதேச அமைப்பு ஆகும்.

**6. சூடான் குடியரசின் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் யார் ?**

A. ஹசன் அல் பஷீர்
B. ஹசாபு முகமது ரகுமான்
C. பக்ரி ஹாசன் சலே
D. முகம்மத் அஹ்மத்

**விடை: C. பக்ரி ஹாசன் சலே**

1989 ஆம் ஆண்டிலிருந்து பிரதமர் பதவி நீக்கப்பட்டதை அடுத்து, 1 மார்ச் 2017 அன்று ஜனாதிபதி ஒமர் அல்-பஷீர் சூடானின் முதல் பிரதமராக பக்ரி ஹாசன் சலேவை நியமித்துள்ளார். குறைந்த அதிகாரங்களை கொண்டு பிரதமர் பதவி மீண்டும் நிறுவப்பட்டது, எனினும் மிக அதிக அதிகாரம் ஜனாதிபதி கைகளிலேயே இருக்கும். சலே பிரதமர் என்ற முறையில், துணை ஜனாதிபதி பதவியை தக்க வைத்துக்கொள்வார்.

**7. 2017 ஜீரோ பாகுபாடு தினத்தின் (Zero Discrimination Day) மையக்கரு என்ன ?**

A. Think & Act on Unity
B. Stand Out
C. Open Up, Reach Out
D. Make Some Noise for Zero Discrimination

**விடை: D. Make Some Noise for Zero Discrimination**

ஒருவர் தோற்றத்தில் எப்படி இருந்தாலும், அவர்கள் எங்கிருந்து வந்திருந்தாலும் அல்லது அவர்கள் யாரை நேசித்தாலும் கண்ணியத்துடன் ஒரு முழு வாழ்க்கையை அனைவரும் வாழும் உரிமையை கொண்டாட மார்ச் 1 ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் ஜீரோ பாகுபாடு தினம் அனுசரிக்கப்படுகிறது. ஜீரோ பாகுபாடு சின்னம் பட்டாம்பூச்சி ஆகும். மாற்றத்தின் ஒரு அடையாளமாக பட்டாம்பூச்சி அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. 2017 ஆம் ஆண்டிற்கான மையக்கரு "Make Some Noise for Zero Discrimination".

**8. சிவில் கணக்குகள் நாள் (Civil Accounts Day), இந்தியாவில் எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது ?**

A. மார்ச் 5
B. மார்ச் 2
C. மார்ச் 3
D. மார்ச் 1

**விடை: D. மார்ச் 1**

சிவில் கணக்குகள் தினத்தின் (CAD) 41-வது பதிப்பு, இந்திய சிவில் கணக்குகள் சேவையின் (ICAS) 41-வது ஆண்டு நிறைவை ஒட்டி புது தில்லி விஞ்ஞான் பவனில் மார்ச் 1, 2017 அன்று கொண்டாடப்பட்டது. ICAS-யானது மார்ச் 1, 1976 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நிதி அமைச்சகத்தில் உள்ள செலவு துறையின் கீழ் ICAS செயல்படுகிறது. இந்திய அரசிற்கு (GOI) நிதி மேலாண்மை சேவைகளை வழங்குவதில் ICAS முக்கிய பங்கு வகிக்கிறது. கட்டண சேவைகள், வரி வசூல் அமைப்பிற்கு ஆதரவு, அரசு பரந்த கணக்கியலை செய்தல், நிதி அறிக்கையிடல் செயல்பாடுகள், வரவு செலவுத் திட்ட மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மத்திய அரசின் சிவில் அமைச்சரவைகளில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளுதல் ஆகியவற்றை ICAS செய்கிறது.

**9. 2017 ஆம் ஆண்டின் ஹார்வர்ட் சிறந்த மனிதாபிமான விருது (Harvard Humanitarian) யாருக்கு அளிக்கப்பட்டுள்ளது ?**

A. ஆங் சான் சூ கீ
B. ராபின் ரிஹானா பென்டி
C. தோர்ப்ஜோர்ன் ஜக்லாந்து
D. பிஷப் டெஸ்மண்ட் டுட்டு

**விடை: B. ராபின் ரிஹானா பென்டி**

பெர்பேடியன் பாடகர் மற்றும் பாடலாசிரியர் ராபின் ரிஹானா பென்டிக்கு, தன்னுடைய பார்படோஸ் நாட்டில் புற்றுநோய் சிகிச்சையை மேம்படுத்த

மற்றும் கரீபியன் மாணவர்களை அமெரிக்காவில் படிக்க வைக்க கல்லூரி உதவித்தொகை அமைக்கும் அவரது பணியை அங்கீகரிக்கும் விதமாக 2017 ஆம் ஆண்டின் ஹார்வர்ட் சிறந்த மனிதாபிமான விருது வழங்கப்பட்டுள்ளது. வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் மற்றும் மக்களை அதிக உயரத்திற்கு ஈர்க்கும் தனி நபரின் பணிகள் மற்றும் செயல்லுக்கு மதிப்புமிக்க ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் மூலம் இந்த வருடாந்த விருது வழங்கப்படுகிறது.

**10. அவனி லேக்ஹரா(Avani Lekhara), எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ?**

A. செஸ்
B. குத்துச்சண்டை
C. துப்பாக்கி சுடுதல்
D. கிரிக்கெட்

**விடை: C. துப்பாக்கி சுடுதல்**

சமீபத்தில், UAE-வின் Al Ain-ல் நடைபெற்ற உலக துப்பாக்கி சுடுதல் பாரா விளையாட்டு உலக கோப்பையில் இந்தியாவை சேர்ந்த அவனி லேக்ஹரா(15) பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் ஸ்டாண்டிங் SH1 நிகழ்வில் (R2) 244.4 சுட்டு ஜூனியர் உலக சாதனை செய்து வெள்ளி பதக்கம் வென்றார். இது தவிர, பாரா துப்பாக்கி சுடும் வீரர் பூஜா அகர்வால், பெண்கள் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் SH1 நிகழ்வின் (P2) இறுதி ஆட்டத்தில் 228.4 சுட்டு போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். குறிப்பாக, இரு இந்திய துப்பாக்கி சுடும் வீரர்களும் அவர்களின் முதல் சர்வதேச போட்டியில் விளையாடுகின்றனர்.